அறிவித்திருக்கிறார்கள். சிறுதொழில்கள் நலிவுறாத வகையில் மூலப் பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு, அரசுக்குத் தேவையானவற்றை சிறு தொழில்களிடமிருந்து வாங்கி, அவர்கள் பயன் பெறுகிற வகையில் செய்வதற்கு, 'சிட்கோ' நிறுவனம் அந்த முறையை மேற்கொண்டிருக்கிறது. சிறுதொழில்கள் பிரச்னை பெருமளவிற்கு தீர்க்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பு.

* வினா எண். 823— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை ஏக்கரில் இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) ஆம்.

(ஆ) 1978–79-ல் 213 ஏக்கரா பரப்பில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 213 ஏக்கரா நிலப்பரப்பில் அமுல்படுத்துவதாகச் சொன்னார்கள். இப்போது அவைகள் செடியாக இருக்கின்றனவா? எந்த நிலையில் இருக்கிறது? பட்டுப் பூச்சி உற்பத்தியாகும் நிலையில் இருக்கிறதா என்பதையெல்லாம் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1978–79-ஆம் ஆண்டில் இது மேற்கொள்ளப்பட்டது. இப்போது 1979–80 ஆம் ஆண்டில் இருக்கிறோம். அந்த ஆண்டில் 213 ஏக்கருக்கு மேல் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூரில் மிகச்சிறந்த முறையில் அந்தப் பட்டுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, அனைத்து இந்தியாவிலேயே மிகச் சிறந்தது என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்தப் பட்டுக் கூடுகளை கும்பகோணத்தில் உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதை அதிகரிப்பதற்கு ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா? சென்ற ஆண்டு அந்தப் பயிர் போட்டதில் அவர்கள் வருவாய் எப்படி இருந்தது?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்குசெலவுபோக,சராசரியாக, ஆண்டு. ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4,000 முதல் ரூபாய் 7,000 வரை கிடைத்து வருகிறது. அதன் காரணமாக 213 ஏக்கர் என்று 1978—79-ஆம் ஆண்டில் இருந்ததை இப்போது 1979—80-ஆம் ஆண்டில் 1,000 ஏக்கரில் தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பயிர் தயாரிக்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, அந்த செரிகல்சர் இடத்தில் எவ்வளவு நாட்களுக்கு பின்னால் பட்டுப் புழுக்கள் விடப்பட்டு, அந்தச் செடி எந்த ஸ்டேஜில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:—புழுக்கள் விடப்பட்டு அவைகள் கூடுகளையும் கட்டி, அதிலிருந்து நூலும் எடுக்கப்பட்டு விட்டது.

திரு. இரா. க. முனிரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்தில் பட்டுப் பயிர் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி இல்லை என்றால் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 1978—79-ஆம் ஆண்டிலே செங்கல்பட்டிலே 80 ஏக்கரில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, 16,000 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்புக்காக அரசு ஆவன செய்யுமா என்பதை அறிகிறேன். அதோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் பட்டுப் பூ நூல் வாங்குவதற்கு ஈடுபட்டிருக்கிற ஒரு அதிகாரி முறைப்படி அலதை வாங்கி அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978—79-ல் 109 ஏக்கரிலேபட்டு வளர்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு
படுத்தக் கூடிய திட்டம் இருக்கிறது.
காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய பட்டு நூல்

கெட்டிங் பெடரேஷன் -ஐப் பற்றி என்று நினைக்கிறேன். சில புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. பட்டு நூல் யாரிடமிருந்து வாங்கப்படுகிறதோ, அவர்களுக்கு உடனடியாகப்பணம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு உத்திரவு இட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. உரிமைப் பிரச்னை மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள்மீது பேரவையின் 184-வது விதியின்கீழ் 23-4-1979 அன்று பேரவையில் ஒரு அவை உரிமை மீறல பிரச்னையை எழுப்பினார்கள். அன்றே மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த அறிவிப்பில் ''தனிப்பட்ட வர்களைப் பழி வாங்குவதற்காகவும் இந்திரா காந்தியை விசாரிப் பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம்'' என்று மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் பேசியதாகக் குறிப்பிட்டிருந்தார். திரு. லத்தீப் அவர்கள் ''Cases against a single individual'' என்று தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில் ''நான் பேசாத ஒன்றை நான் பேசியதாக உங்களுக்கு எழுதி என் மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாமா என்று நான் யோசிக்கிறேன். ஏனெனில் சட்டமன்றத்தில் நான் உபயோகிக்காத வார்த்தைகளை உபயோகித்ததாகஅவர்கள் உண் மைக்கு மாறாக எழுதி தங்களிடம் கொடுத்து நான் உரிமை மீறியதாகச் சொன்னது எப்படி பொருத்தமுடையதாக இருக் கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கூறியுள்ளார்.

பேரவைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவைத் துறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. அவற்றை பார்த்து விட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முன் அறிவிப்பைக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாதது வருந்தத்தக்கது.